



# காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய கடல்தீர்த்தம் எடுத்து வந்து திருக்கல்யாணகால் நடல்

காரைதீவு அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திங்கள் திருக்குளிர்ச்சி விழா இன்று ஆரம்பமானது.

கிழக்கிலங்கையின் தென்பால் அருள் வளமும் திருவளமும் நிறைந்திலங்கும் செந்தமிழ் மாட்சியும் சைவத்தின் உயர்நெறி கமழும் தொன்மை வாய்ந்த அழகு நிறை காரைதீவு கிராமத்தின் காவல் தெய்வமாக பன்னெடுங்காலமாக திருக்கோயில் கொண்டு அருள் ஜோதி வீசும் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த குரோதி வருட வைகாசித்திங்கள் திருக்குளிர்ச்சி விழா நிகழும் சித்திரைத் திங்கள் 30 ஆம் நாளான இன்று கடல் தீர்த்தம் எடுத்துவரப்பட்டு திருக்கல்யாண கால் நடும் நிகழ்வு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து விஷேட பூஜைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று எதிர்வரும் 20ம் திகதி மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலிருந்து மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வு ஆரம்பமாகி பொங்கலுக்கு நெற்குத்தும் நிகழ்வு நடைபெறும்.

எதிர்வரும் 21ம் திகதி 8ம் நாள் காலை திருக்குளிர்ச்சி பாடப்பட்டு நிறைவுறும்.

அதனை தொடர்ந்து எதிர்வரும் 27ம் திகதி 8ம் நாள் சடங்கு பூஜை இடம்பெறும் இதன்போது நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் பொங்கலிடுதல் என்பன நடைபெறும்.





